**தலைப்பு – 179, கமத்தொழில் சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013**

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1. ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை
2. ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## I ஆம் பகுதி

**கமத்தொழில் சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 281 | கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் |
| 284 | வனச்சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 43,650,100,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 25,253,404,835 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 58,678,260 இற்கும் ரூபா 18,160,371,253 இற்கும் இடைப்பட்ட அளவில் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 1.34 சதவீத்திற்கும் 47.67 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 179 | 38,097,535,000 | 19,937,163,747 | 18,160,371,253 | 47.67 |
| 281 | 4,378,055,000 | 4,319,376,740 | 58,678,260 | 1.34 |
| 284 | 1,174,510,000 | 996,864,348 | 177,645,652 | 15.12 |
| மொத்தம் | 43,650,100,000 | 25,253,404,835 | 18,396,695,165 | |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சின் கீழுள்ள திணைக்களமொன்றினால் 2013 ஆம் ஆண்டில் 01 வருமான தலைப்புக்காக ரூபா 17 மில்லியன் வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 17.2 மில்லியன் மொத்த வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பீட்டு வருமானத்தில் 101 சதவீத வருமானம் சேகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானக் குறியீடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 20.03.02.06 | 17,000,000 | 17,250,282 | 250,282 | 1.47 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களிற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியா னவை | ஆகக்குறை ந்த எல்லை | உள்ளபடியா னவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியா னவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 17901 | 5,000,000 | 4,428,118 | 2,200,000 | 13,136,827 | 30,000,000 | 8,899,840 |
| 28101 | 250,000,000 | 113,382,029 | 140,000,000 | 156,000,000 | 830,000,000 | 341,111,103 |
| 28401 | 44,000,000 | 33,664,318 | 28,000,000 | 32,178,008 | 140,000,000 | 122,850,630 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொதுவைப்புக் கணக்கு

### 2.4.1 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களகங்களில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 1,549,963 மொத்தமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கின் இல. | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கமத்தொழில் சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 7002/0000/00/0418/0013/000 | 38,253 |
| வனச்சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 7002/0000/00/0145/0013/000 | 1,478,852 |
| கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 7002/0000/00/0088/0013/000 | 32,858 |
| மொத்தம் | | 1,549,963 |

### 2.4.2 பொது வைப்புக் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 1,779,944,481 மொத்தமாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கின் இல. | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கமத்தொழில் சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 6000/0000/00/0015/0188/000 | 455,093 |
| கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 6000/0000/00/0015/0136/000 | 106,817,372 |
| | 6000/0000/00/0006/0051/000 | 281,742,736 |
| | 6000/0000/00/0001/0010/000 | 25,247 |
| | 6000/0000/00/0002/0010/000 | 636,964 |
| | 6000/0000/00/0013/0024/000 | 142,419 |
| வனச்சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 6000/0000/00/0015/0139/000 | 110,286,413 |
| | 6000/0000/00/0006/0020/000 | 1,279,838,237 |
| மொத்தம் | | 1,779,944,481 |

## பகுதி 2

## ஒவ்வொரு தலைப்பும் தொடர்பான விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 179 கமத்தொழில் சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கமத்தொழில் சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கும் வருமானக் கணக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 02 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கமத்தொழில் சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு காண்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 12 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,365,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 15 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச் செலவின விடயங்களிற்குரிய தேறிய ஏற்பாட்டின் 41 சத வீதத்திற்கும் 98 சத வீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) கட்டுநிதி கணக்கு**

2014 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் அமைச்சால் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதி ரூபா 29,000 ஆக காணப்பட்டதுடன் அந்த மீதி 2011 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வருகின்றது.

**1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

ஏனைய நிறுவனங்களிற்கு உரித்தான சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| சொத்து வகை | சொத்து உரித்தாக காணப்பட்ட நிறுவனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | வனப் பாதுகாப்பு திணைக்களம் | 01 |
| | கல்வித் அமைச்சு | 05 |
| | கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 02 |
| | நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள முகாமைத்துவ அமைச்சு | 01 |

**1.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

அமைச்சினால் 08 கழிவறைகளை திருத்தவதற்காக செலுத்தப்பட்டிருந்த தொகையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கையேட்டிலுள்ள 5.4.6 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 457,535 பிடித்து வைத்திருக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.6 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க அரசாங்க செலவின முகாமைத்துவம் தொடர்பிலான சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கிகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக 01 முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கும் 01 அலுவலக உதவியாளர் பதவிக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கையில், 2013 பெப்ரவரி முதல் மே வரை 05 முகாமைத்தவ உதவியாளர்களிற்கும் அலுவலக உதவியாளர் ஒருவரிற்கும் 4,385 மேலதிக மணித்தியாலங்களிற்காக ரூபா 253,483 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**1.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீடியோ புகைப்படக்கருவிகள், கணனிகள், தொலைக்காட்சிகள், குளிரூட்டிகள், நிழற்படப்பிரதி இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன 2012 ஆம் ஆண்டில் வனச்சீவராசிகள் வளப் பாதுகாப்பு அமைச்சினால் ரூபா 6,269,571 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2013 ஆம் ஆண்டில் அமைச்சின் அலுவலகம் மாற்றப்பட்டமையால் அச் சொத்துக்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அச் சொத்துக்கள் கிடைக்கப்பெற்றதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் கட்டிடத்தின் உட்பக்க சுவர்களிற்கு வர்ணம் தீட்டுதல் ஒப்பந்தத்தின் மதிப்பீட்டிலுள்ள 03 மற்றும் 05 ஆம் விடய இலக்கங்களின் கீழ் வேலைகள் நிறைவேற்றப்படாதிருந்த போதிலும், அதற்காக ரூபா 112,810 ஒப்பந்தகாரர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கிராமிய பிரதேசங்களில் தாபிக்கப்பட்டுள்ள சேதனப் பசளை உற்பத்தி செய்யும் பிரிவுகளில், சேதனப் பசளை உற்பத்தியினை நெற் பயிர்ச் சைகையாளர்கள் பயன்படுத்தவதனை ஊக்குவிப்பதற்காக விவசாயிகளால் பயன்படுத்தப்படுகின்ற யூரியா

உரத்தின் அளவிற்குச் சமமான அளவில் அச் சேதனப் பசளை விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டிருந்தது. சேதனப் பசளை உற்பத்திப் பிரிவுகளால் விநியோகிக்கப்படுகின்ற உரத்திற்கான பெறுமதி, உரங்களின் விற்பனை விலையினைத் தீர்மானிக்கும் சபையால் நிச்சயிக்கப்பட்டிருந்தது. அந்த விலைகளின் அடிப்படையில் கிராமிய பிரதேசங்களில் தாபிக்கப்பட்டுள்ள சேதனப் பசளை உற்பத்தி செய்யும் பிரிவுகளால் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்த உரங்களிற்கு கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. அவ்வாறு அநுராதபுரம் கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தினால் அந்த மாவட்டத்திலுள்ள 20 கமநல நிலையங்களின் சேதனப் பசளை உற்பத்தியாளர்களிற்கு ரூபா 19,239,546 மொத்தமான தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடியாவ கமத்தொழில் சேவைகள் நிலையத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த சேதனப் பசளை பிரிவுகளிலுள்ள 48 உறுப்பினர்களினால் 384,143 கிலோ கிராம் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த விநியோகப் பட்டியலின் படி ரூபா 3,073,144 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் தெரியவந்தன.

- 10 ஆம் பிரிவு 385 ஆம் வட்டார சேதனப் பசளை உற்பத்திப் பிரிவின் 09 உறுப்பினர்களிற்கு ரூபா 280,476 செலுத்தப்பட்டிருந்தது. உண்மையாக ஒரு நபரினால் 3,683.5 கிலோ கிராம் பசளையை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்காக ரூபா 29,468 செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி ரூபா 251,008 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.
- 396 ஆம் இலக்க வட்டாரத்தின் சேதனப் பசளை உற்பத்திப் பிரிவிற்குச் சொந்தமான மேல் ஹல்மில்லேவ விவசாயிகள் அமைப்பின் நான்கு உறுப்பினர்களிற்கு 39,299.5 கிலோ கிராம் சேதனப் பசளையை உற்பத்தி செய்து வநியோகிப்பதற்காக ரூபா 314,396 செலுத்தப்பட்டிருந்தமை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், உண்மையில் 3,200 கிலோ கிராம் மாத்திரம் உற்பத்திசெய்து விநியோகிகப்பட்டிருந்தது. அதன்படி அந்த உறுப்பினர்களிற்கு 36,099.5 கிலோ கிராம் பசளைக்காக ரூபா 311,196 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மாவட்டத்திலுள்ள 20 கமநல சேவை நிலையங்களில் 2,404.95 மெற்றிக் தொன் சேதனப் பசளையை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்காக ரூபா 19.23 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த உற்பத்தி செய்யப்பட்ட

பசளை உரிய தரத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததா என்பது குறித்து பரீட்சிக்கும் வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள 40 கமநல சேவை நிலையங்களிற்கு சேதனப் பசளை உபகரணங்கள் மற்றும் உள்ளீடுகளை வழங்கியமைக்காக ரூபா 72,558,460 செலவிடப்பட்டிருந்த போதிலும், அதில் 18 நிலையங்களில் 2014 யூன் 30 வரை எவ்வித சேதனப் பசளை உற்பத்திகளும் இடம்பெற்றிருக்கவில்லை.

(iv) அதன்படி, சேதனப் பசளை உற்பத்திச் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த தொகையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றம் அடையப்பட்டிராததுடன், சேதனப் பசளை உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

2012 ஆம் ஆண்டின் நாட்டுக்கு மகுடம் தேசிய கண்காட்சிக்காக நிர்மாணிக்கப்பட்ட தோரணத்தின் கழற்றி அகற்றப்பட்ட பகுதிகள் மீள கையளிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டின் நாட்டுக்கு மகுடம் தேசிய கண்காட்சிக்காக நிர்மாணிக்கப்பட்ட தோரணத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளின் படி, ரூபா 50,000 போக்குவரத்து கட்டணமும் உள்ளடங்கியிருந்த போதிலும், போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல்களிற்கான கட்டணமாக ரூபா 39,000 செலுத்தப்பட்டிருந்தது.

**1.9 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 11 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 42 | 38 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 25 | 25 | - |
| | | 79 | 74 | 05 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு காணப்பட்ட 05 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

மீளாய்வாண்டில் ஏனைய தரப்பினர்களிற்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் | 01 | அமைச்சரின் பதவியணி | 2013 பெப்ரவரி |
| அலுவலக உதவியாளர் | 01 | அமைச்சரின் பதவியணி | 2013 பெப்ரவரி |

**(இ) ஒழுக்காற்று ஒழுங்குவிதிகள் பயிற்சி**

தேசிய தொழிலாளர் கல்வி நிறுவனத்தினால் மேல்மட்ட முகாமையாளர்கள் மற்றும் அரசாங்க சேவையிலுள்ள மேற்தர உத்தியோகத்தர்களை இலக்காகக் கொண்டு இலங்கை நிர்வாக சேவையிலும் அதனையொத்த சேவைகளிலுமுள்ள II மற்றும் III ஆந் தர உத்தியோகத்தர்களிற்காக ஒழுக்காற்று ஒழுங்குவிதிகள் பயிற்சியொன்று 2013 ஏப்ரல் 22 ஆந் திகதி முதல் 24 ஆந் திகதி வரை நடாத்தப்பட்டிருந்தது. மேற்படி பதவிகளிற்கு உரித்தற்ற இரண்டு அபிவிருத்தி உதவியாளர்களும் இரண்டு முகாமைத்துவ உதவியாளர்களும் பங்குபற்றியிருந்தனர்.

## 2. தலைப்பு 281 – கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 09 ஆந் திகதி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

#### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

திணைக்களத்தினால் 2014 மார்ச் 31 ஆந் திகதியளவில் கீழே காட்டப்பட்டவாறு கமத்தொழில் அபிவிருத்தி மன்றங்களின் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| ஆண்டு | சமர்ப்பிக்கப்படாத கண்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2006 | 32 |
| 2007 | 32 |
| 2008 | 36 |
| 2009 | 59 |
| 2010 | 56 |
| 2011 | 64 |
| 2012 | 109 |
| 2013 | 205 |

**(ஆ) கட்டுநிதிக் கணக்கு**

நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக பதவிநிலை சாராத உத்தியோகத்தர் ஒருவருக்கு 04 சந்தர்ப்பங்களில் ரூபா 2,167,000 உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 28101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 22,612,243 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(ii) தனிப்பட்டோர் மீதிகளின் பொழிப்பின் கூட்டுத்தொகை கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் ஒப்பிடுகையில் ரூபா 678,192 வேறுபாடு காணப்பட்டது. இந்த வேறுபாட்டினுள் 2007 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட தனிப்பட்டோர் மீதிகளின் பொழிப்பின் வேறுபாடான ரூபா 189,178 தொகையும், மீளாய்வாண்டின் இறுதியில் இனங்காணப்படாதிருந்த வரவு மீதியான ரூபா 2,049,291 தொகையும், இனங்காணப்படாதிருந்த செலவு மீதியான ரூபா 1,560,277 தொகையும் உள்ளடங்கியிருந்தன.

(iii) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது ஓய்வுபெற்ற, பதிவிநீக்கம் செய்யப்பட்ட மற்றும் பதவி முடிவிற்கு கொண்டுவரப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டியிருந்த மீதிகளின்

மொத்தம் ரூபா 13,643,691 ஆக காணப்பட்டதுடன் அந்த மீதியில் 5 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட ரூபா 5,255,012 மீதியும் உள்ளடங்கியிருந்தது.

(iv) ஓய்வூதியம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா 4,362,950 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,155,948 தொகை 20 உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய பணிக்கொடைகளிலிருந்து அறவிடப்பட்டு ஓய்வூதிய திணைக்களத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதற்கான ஏற்பாட்டை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு தவறியிருந்தது.

(v) மாகாண சபைகளிற்கும் உள்ளூராட்சி மன்றங்களிற்கும் போட்டியிட்டு தெரிவுசெய்யப்பட்ட 05 உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 55,110 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) மாகாண சபை உத்தியோகத்தர்களாக உள்ளீர்க்கப்பட்ட கமத்தொழில் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 486,944 கடன் மீதி 05 ஆண்டுகளிற்கும் மேலாக நிலவி வந்திருந்ததுடன் அந்த மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் சேவை நிலைய இடமாற்றம் பெற்று வந்திருந்த மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் மூன்று மாதத்திற்குள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தில் 06 ஆண்டுகளிற்கும் மேலாக திர்க்கப்படாதிருந்த இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் ரூபா 5,809,595 கூட்டுத்தொகையும் சேவை நிலைய இடமாற்றம் பெற்று வந்திருந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் ரூபா 20,273 மொத்தமும் 2013 திசெம்பர் 31 வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(viii) 2012 ஆம் ஆண்டின் கட்டுப்பாட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,772,758 தொகையான கடன் மீதி 2013 இன் கட்டுப்பாட்டுக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன், அக் கடன் மீதி தீர்க்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

## 2.4 நால்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 2.4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று செயற்பட்டிருந்த போதிலும், தலைமை அலுவலகத்தினதும் மாவட்ட அலுவலகங்களினதும் நடவடிக்கைகள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை செயற்படுத்தல்**

---

மீளாய்வாண்டில் இரண்டு தடவைகள் மாத்திரம் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

---

திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) திணைக்களத்திற்குச் சொந்தமான 30 இயந்திராதிகள் 2 முதல் 10 வருடத்திற்கு இடைப்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(ii) திணைக்களத்திற்குரிய 75 உத்தியோகபூர்வ இல்லங்கள் உருக்குலைந்து காணப்பட்டன.

**(ஆ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

---

திணைக்களத்தினால் விவாசாயத் திணைக்களத்திற்கு உரித்தான 03 வாகனங்கள் 15 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக முறையற்ற விதத்தில் பயன்படுத்தி வரப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களை அமைச்சிற்கு மீளளிப்பதற்கோ அல்லது திணைக்களத்திற்கு பொறுப்பேற்பதற்கோ 2014 மார்ச் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 இணக்கமின்மைகள்**

---

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **(அ)** | **நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| | **2000 இன் 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டம்** | | |
| | 43 ஆம் பிரிவு | - | 1,846 விவசாய அமைப்புக்கள் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | 56 ஆம் பிரிவு | 1,054,554 | ஒவ்வோர் ஆண்டிலும் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் ஏக்கர் வரிகள் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 நவம்பர் 20 ஆந் திகதியளவில் நிலுவையாகக் காணப்பட்ட வரித் தொகை ரூபா 1,054,554 ஆகும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** | | |
| | நிதிப்பிரமாணம் 237(அ) | 24,704,195 | மொனராகலையிலுள்ள 03 அபிவிருத்தி மன்றங்களால் இருப்புச் சான்றிதழை பெற்றுக்கொள்ளாது கொடுப்பனவுகள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. |
| **(இ)** | **அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை** | | |
| | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.11 ஆம் பந்தி | | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு 06 மாதங்களிற்கு ஒரு முறையும் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| **(ஈ)** | **திறைசேரி சுற்றறிக்கைகள்** | | |
| | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| **(உ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை** | | |
| 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க சுற்றறிக்கை | | திணைக்களத்தில் பாவனைக்குதவாத நிலையில் காணப்பட்ட வாகனங்கள், விவசாய உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் டிரக்டர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை** | | |
| (i) 9.3.1 ஆம் வழிகாட்டல் | | கொள்வனவு நடைமுறைகளிலிருந்து விலகி ரூபா 200,000 இற்கு மேற்பட்ட திருத்த வேலைகள் தொடர்பில் 5 சந்தர்ப்பங்களில் வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **(எ) கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை** | | |
| 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய 04/2012 ஆம் இலக்க (விவசாய வங்கி) சுற்றறிக்கையின் 4.4.2 ஆம் பந்தி | 59,605,855 | விவசாய வங்கியால் வழங்கப்பட்டிருந்த மூலதனத் தொகைகள் 5 ஆண்டுகளிற்குள் மீளளிக்கப்பட்ட வேண்டிய போதிலும், 2013 திசெம்பர் 31 ஈந் திகதியில் உள்ளவாறு 24 விவசாய வங்கிகளால் மீளச் செலுத்தப்படாதிருந்த மூலதனத் தொகைகள் ரூபா 59,605,855 ஆகும். |

## 2.7 திட்டமிடல்

### வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக செயற்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலி, யக்கலமுல்ல உரக் களஞ்சியத்தை திருத்தியமைப்பதற்காக ரூபா 582,707 செலவிடப்பட்டிருந்த போதிலும், அது மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, மீளாய்வாண்டில் 4 மாவட்டங்களை இலக்காகக் கொண்டு கணனி மென்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான செயன்முன்னேற்ற

அறிக்கையின் படி தலைமை அலுவலகத்திற்காக மாத்திரம் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.8 வங்கிக் கணக்குகளை இயக்கிச் செல்வதிலுள்ள குறைபாடுகள்**

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி வெளிப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சீராக்கல் விபரம் | | காலப்பகுப்பாய்வு | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | 06 மாதங்களிற்கு மேல் 01 ஆண்டிற்கு குறைந்த | 01 ஆண்டிற்கு மேல் 03 ஆண்டுகளிற்கு குறைந்த | 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வசூலாகாத வைப்புக்கள் | 81,776 | 53,729 | 9,675 | 145,180 |
| (ii) | வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 1,809,387 | 290,270 | 600 | 2,100,257 |
| (iii) | இனங்காணப்படாத வரவு வைத்தல்கள் | - | 376 | 15,475 | 15,851 |
| (iv) | இனங்காணப்படாத செலவு வைத்தல்கள் | | 1,249 | 14,625 | 15,874 |

**2.9 நட்டங்களும் சேதங்களும்**

மீளாய்வாண்டில் 02 சந்தர்ப்பங்களில் வாகனமொன்று விபத்தில் சிக்கியிருந்ததுடன் இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கஹதுடுவ கமத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தரால் அக் கமத்தொழில் அபிவிருத்தி மன்றத்தின் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் கைதவறவிடப்பட்டமை தொடர்பில் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து எழுத்துமூல அறிக்கையினை பெற்று 2011 மே 28 ஆந் திகதி கொழும்பு மாவட்ட கமத்தொழில் அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியமையால் கிடைக்கும் வருமானத்தை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கையில் ஒவ்வொரு மாவட்டமும் முறைப்படியான மற்றும் ஒத்ததன்மையான நடைமுறையொன்றினைப் பின்பற்றியிருக்கவில்லை. மாவட்ட அலுவலகங்கள் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியமையால் சேகரிக்கின்ற வருமானத்தை தொடர்ந்து வரும் மாதத்தில் தலைமை அலுவலகத்திற்கு வரவழைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2003 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 14/2003 (கமத்தொழில் வங்கி 09/2003) ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் விவசாய வங்கிகளிலிருந்து மாதாந்தம் ஒருங்கிணைந்த அறிக்கைகளைப் வரவழைத்துக் கொள்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது. கொழும்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற 8 விவசாய வங்கிகளிலின் ஒருங்கிணைந்த அறிக்கைகளை 2011 திசெம்பர் மாதத்தின் பின்னர் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், 532 விவசாய வங்கிகளில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த அறிக்கைகளை அனுப்பிவைத்திருக்காத விவசாய வங்கிகளின் எண்ணிக்கை 311 ஆகும்.

(ஈ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் 343 விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதவிகளிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2010 ஆம் ஆண்டில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தது. ஆதற்காக ரூபா 4,542,044 செலவிடப்பட்டிருந்ததுடன் பதவியணயினர் 2014 நவம்பர் 19 ஆந் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) அநுராதபுரம் மாவட்டத்தின் யகல்ல, ரனோராவ மற்றும் மரதன்கடவல போன்ற கமத்தொழில் அபிவிருத்தி மன்றங்களில் 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இனங்காணப்பட்டிருந்த ரூபா 5,062,645 மொத்தமான உர இருப்பு குறைவு தொடர்பில் அதனை பொறுப்புவாய்ந்த தரப்பினர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு 2014 நவம்பர் 19 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் ரூபா 774,400 செலவிட்டு வாகனமொன்று திருத்தியமைக்கப்பட்டிருந்தது. ஓராண்டு உத்தரவாதக் காலத்தை கருத்திற்கொள்ளாது முதலாவது திருத்தத்தினை மேற்கொண்டிருந்த நிறுவனத்திடமே ரூபா 539,680 செலவிட்டு மீண்டுமொரு தடவை திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) நுவரெலிய உதவி ஆணையாளர் உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். 2014 யூலை 14 ஆந் திகதி வரை அவர் அந்தஉத்தியோகபூர்வ இல்லத்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அக் காலப்பகுதிக்காக வதிவிட வாடகையினை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.11 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிகத்தின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| i. | சிரேஷ்ட மட்டம் | 107 | 59 | 48 | - |
| ii. | மூன்றாம் மட்டம் | 645 | 434 | 211 | - |
| ii | இரண்டாம் மட்டம் | 14,248 | 11,634 | 2,614 | - |
| iv | ஆரம்ப மட்டம் | 425 | 278 | 147 | - |
| v. | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 178 | - | 178 |
| | மொத்தம் | 15,425 | 12,583 | 3,020 | 178 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்ட 3,020 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2013 சனவரி 08 ஆந் திகதிய DMS/G2/56/01(vel-1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் 12,873 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந்

திகதியில் உள்ளவாறான அங்கீகரித்த பதவியணியினர் எண்ணிக்கை 15,425 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஏனைய அமைச்சுக்களினால் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த 116 அபிவிருத்தி உதவியாளர்களும் 62 விவசாய உற்பத்தி செயற்திட்ட உதவியாளர்களும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி திணைக்களச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த 178 உத்தியோகத்தர்களும் திணைக்களத்தினால் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கையின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. தலைப்பு 284 – வனச்சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வனச்சீவராசிகள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 02 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் வனச்சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 இலிருந்து 3.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான

கணக்காய்வு காண்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்காய்விற்கான சான்றின்மை**

பதவி இடைநிறுத்தப்பட்டிருந்த 24 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 745,631 தொகை மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட 29 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,530,637 கடன் மீதிகளிற்காக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏற்பாடுகளை மீறி செலவுகளைச் செய்தல்**

11 செலவின விடயங்களிற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டினை ரூபா 17,523,281 மொத்தத் தொகையால் விஞ்சி மீளாய்வாண்டின் இறுதியளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) பாதீட்டு முரண்**

06 செலவு விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய ஏற்பாட்டின் 5 சதவீதத்திற்கும் 58 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

28401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 4,445,535 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 02 ஆண்டுகளிற்கும் மேலாக காணப்பட்ட ரூபா 28,313,641 ஆன 141 வைப்பு மீதிகள் தொடர்பில் நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் செயற்திட்ட நிதியங்கள் செயற்திட்டம் பூரணப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளிற்குப் பின்னர் காலாவதியான வைப்புக்களாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 10 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 807,463 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வட மாகாண உபாய சுற்றாடல் மதிப்பீட்டுச் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 930,000 தொகையில் கள ஆராய்ச்சி செலவினம்

நீங்கலாக எஞ்சியிருந்த ரூபா 535,700 தொகையை அரசாங்க வருமானத்திற்கு எடுக்காது அப் பிரிவின் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்திற்குச் சொந்தமான 22 மோட்டார் வாகனங்கள் ஏறத்தாழ ஒரு ஆண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(ii) பலடுபான அலுவலக வளவில் நடாத்திவரப்பட்டிருந்த சிற்றுண்டிச் சாலை மூடப்பட்டதன் காரணமாக அக் கட்டிடம் உடைந்து அழிவுறும் நிலையில் காணப்பட்டது.

(iii) பூதவ சுற்றுலா விடுதியின் அருகில் அமைந்துள்ள இராணுவத்தினால் பயன்படுத்தப்பட்டு தற்போது கைவிடப்பட்டுள்ள கட்டிடத்தை புதுப்பித்து சுற்றுலா விடுதியாக மேம்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கட்டிடத்தில் பெருமளவு தளபாட உபகரணங்கள் காணப்பட்டதுடன் அவற்றைக் கணக்கிட்டு புத்தகங்களுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சில உபகரணங்கள் அழிவுறும் நிலையில் காணப்பட்டன.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் படி 20 இடங்களில் காணப்பட்ட 12,971 பொருள் விடயங்களில் குறைவாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| **(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| (i) 1970 இன் 01 ஆம் இலக்க மற்றும் 1993 இன் 49 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களால் திருத்தப்பட்ட 1964 இன் கால்நடைகள் மற்றும் விருட்சகங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் (469 ஆம் அதிகாரம்) மற்றும் 2009 இன் 22 ஆம் இலக்க வன விலங்குகள் மற்றும் விருட்சகங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 23(1) மற்றும் 22(அ)(1) ஆம் பிரிவுகள் | - | களிறு அல்லது பிடி ஒன்றினை அனுமதிப்பத்திரமின்றி வைத்திருத்தல் சட்ட விரோதமான போதிலும், உடவலவை மற்றும் ஹபரண பிரதேசங்களிலிருந்து பிடிக்கப்பட்ட 22 யானைக் குட்டிகள் சட்டவிரோதமாக பல்வேறு வர்த்தகர்கள், தேவாலயங்கள் மற்றும் விகாரைகளில் வைத்திருக்கப்பட்டிருந்தன. |
| (ii) 2009 இன் 22 ஆம் இலக்க வன உயிரினங்கள் மற்றும் விருட்சகங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச் சட்டம் | | |
| • 06 ஆம் பிரிவு | - | எந்தவொரு நபரினாலும் தேசிய பாதுகாக்கப்பட்ட வனாந்தரமொன்றின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் சுற்றுலா ஹோட்டல்களை நிர்மாணித்தல் தடைசெய்யப்பட்டுள்ள போதிலும், மின்னேரிய |

| | | |
|---|---|---|
| | | தேசிய வனாந்திரத்தின் எல்லையிலிருந்து 150 மீற்றர்கள் தூரத்தில் தடுக்கப்பட்ட பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றிற்காக 06 இரண்டு மாடிக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. |
| • 9(அ) ஆம் பிரிவு | - | ஆரம்ப சுற்றாடல் ஆய்வு அறிக்கை மற்றும் சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பான மதிப்பாய்வு அறிக்கை என்பவற்றைப் பெற்றுக்கொள்ளாது வன விலங்குகள் சஞ்சரிக்கின்ற அடர்ந்த வனப் பிரதேசத்தில் 06 கட்டிடங்களை நிர்மாணிக்கப்பட்டமை தொடர்பில் வனச்சீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தினால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை**

| | | |
|---|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 104 | - | 2013 ஆம் ஆண்டில் 06 சந்தர்ப்பங்களிலும் 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை 15 சந்தர்ப்பங்களிலும் இடம்பெற்றிருந்த வாகன விபத்துக்கள் தொடர்பான நட்டத்தின் அளவினை நிச்சயித்து ஆரம்ப அறிக்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 115 | 1,452,328 | இரண்டு ஆண்டுகளிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மரக்குற்றி இருப்பிற்காக ரூபா 1,452,328 தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

**(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை**

| | | |
|---|---|---|
| 9.3.1 (ஆ) ஆம் வழிகாட்டல் | 125,000 | கூறு விலைகள் கோரப்படாமல் |

வாகனமொன்று திருத்தப்பட்டிருந்தது.

**3.6 செயலாற்றல்**

**போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்காத பணிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மின்சார வேலிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 192,700,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான செலவினம் ரூபா 199,248,727 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஏற்பாட்டுத் தொகையினை விஞ்சி ரூபா 6,548,727 தொகை மின்சார வேலிகளை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 8.9.1 (அ) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் மின்சார வேலிகளை நிர்மாணிப்பதற்கும் துப்பரவு செய்வதற்குமாக சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு ரூபா 65,528,703 வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறைப்படியான ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(iii) சுத்தப்படுத்தல் நடவடிக்கைகளிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 65,528,703 தொகையில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 9,630,322 தொகை அல்லது வழங்கப்பட்ட தொகையில் 15 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய தொகை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் விளைவற்று நிறுத்தி வைத்திருக்கப்பட்டிருந்தது. இதன் படி மின்சார வேலிகள் நிர்மாணித்தலின் செயன்முன்னேற்றத்தை வனச்சீவராசிகள் திணைக்களம் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாமை அவதானிக்கப்பட்டது.

(iv) 2012 ஆம் ஆண்டில் பிற்போடப்பட்ட 07 மின்சார வேலிகளும் 2013 ஆம் ஆண்டின் புதிய வேலைகளின் கீழ் 11 மின்சார வேலிகளும் 2013 இன் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10 மின்சார வேலிகளும் 2013 இன் ஏனைய வேலைகளின் கீழ் 22 மின்சார வேலிகளுமாக 1,020 கிலோமீற்றர்கள் கொண்ட 50 மின்சார வேலிகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 வரை க்கப்பட்டிருந்தன. 252.35 கிலோமீற்றர்கள் கொண்ட 21 மின்சார வேலிகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அத்துடன், 2014 மே 15 ஆந் திகதி வரை மொத்த செயலாற்றல் 490.5 கிலோமீற்றர்கள் கொண்ட 33 மின்சார வேலிகள் மாத்திரம் நிர்மாணிக்கப் பட்டிருந்தமையாகும். இதன்படி, நிர்மாணித்தலின்

செயன்முன்னேற்றம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 25 சதவீதமாகவும் 2014 மே 15 ஆந் திகதியிலுள்ளவாறு 48 சதவீதமாகவும் காணப்பட்டன. மேலும், 2014 மே 15 ஆந் திகதியிலுள்ளவாறு முழுமையாக வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த மின்சார வேலிகளின் எண்ணிக்கை 14 மாத்திரமேயாகும்.

(v) 2012 ஆம் ஆண்டில் பிரேரிக்கப்பட்டிருந்த 10 மின்சார வேலிகளின் 155.4 கிலோமீற்றர்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 28.4 மில்லியன் செலவிடப்பட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த உபகரணங்களைப் பயன்படுத்தி மின்சார வேலிகளை 2012 இல் அல்லது 2013 ஆம் அண்டில் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) மின்சார வேலிகளை சுத்தப்படுத்தலும் மின்சார வேலிகளை நிர்மாணித்தலும் ஒன்றுடனொன்று இணைந்ததாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மின்சார வேலிகளை சுத்தப்படுத்துவதற்காக ரூபா 8,251,759 செலவிடப்பட்டிருந்த போதிலும், 245 கிலோமீற்றர் நீளம் கொண்ட 10 மின்சார வேலிகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. இதன்படி, மின்சார வேலிகள் துரிதமாக நிர்மாணிக்கப்பட்டிராமை காரணமாக மீண்டும் காடு வளர்வதற்கு வாய்ப்புள்ளமையாலும், மின்சார வேலிகளை நிர்மாணிப்பதற்கான சுத்தப்படுத்தல் செலவினத்தை மீண்டும் மீண்டும் மேற்கொள்வதற்கு ஏற்பட்டுள்ளமையாலும் மேற்படி செலவினம் பயனற்றதாகியிருந்தது.

(vii) தேசத்திற்கு மகுடம் நிதி ஏற்பாட்டின் கீழ் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 49,100,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 07 மின்சார வேலிகளை நிர்மாணித்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

(viii) மின்சார வேலி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2013 ஆம் அண்டில் ரூபா 104,918,100 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த உபகரணங்களிற்காக பொருள் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் பௌதீக இருப்புக் கணிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஒவ்வொரு மின்சார வேலிக்காகவும் எந்தளவு மின்சாரக் கம்பங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**(ஆ) மின்சார வேலி நிர்மாணித்தல் தொடர்பான பௌதீக பரிசோதனைகள்**

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அந்தரவெவ உஸ்கல மின்சார வேலி பராமரித்தல் வேலைகள்

10 கிலோ மீற்றர்கள் நீளம் கொண்ட இந்த மின்சார வேலி அரச சார்பற்ற அமைப்பொன்றினால் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அது உரிய தரத்தில் காணப்படாமையால் மீள நிர்மாணிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் 2013 யூன் மாதத்தில் சிவில் பாதுகாப்பு படைக்கு வழங்கப்பட்டிருந்தன. 2014 யூன் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் இந்த வேளியினை

திருத்துவதற்கு ஒரு ஆண்டிற்கும் மேலான காலம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், திருத்தப்பணி முழுமையாக பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வேலியிலுள்ள 17 கம்பங்களின் தெரிவுப் பரிசோதனையில் 04 திருகை ஆணிகள் வீதம் பயன்படுத்தி இணைப்புச் செய்வதற்காக (17x4) 68 ஆணிகள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 50 ஆணிகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன. மூன்று மின்சார வேலிகளின் மின்சார வோல்ரேஜ் இனை அளவிடுவதற்காக சிவில் பாதுகாப்பு படைக்கு வழங்கப்பட்டிருந்த மீற்றர் மானி செயலிழந்திருந்தது.

(ii) கிரிந்திஓய முதல் தெமோதர வரையான மின்சார வேலி

-----------------------------------------------------------------------------------------------

இந் வேலியின் 06 கி.மீ. தவிர்ந்த எஞ்சிய மின்சார வேலிப் பகுதி முழுவதும் நிலத்தில் சரிந்து விழுந்திருந்ததுடன் பராமரித்தலுக்காக போதியளவு படையினர் ஈடபடுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த வேலி புதுப்பிக்கப்பட்டிருக்காமையால் ரணவராவ குளத்தினை அண்மித்த வனப் பிரதேசம், மின்சார வேலிக்கு உட்புற (கிரமத்தினுள்) மற்றும் மின்சார வேலிக்கு வெளிப்புற பிரதேசங்கள் ஆகியவற்றில் யானைகளின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டது. யானைகளால் பயிர் நிலங்கள், வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு சேதங்கள் விளைவிக்கப்பட்டிருந்தன.

(iii) ஹந்தபானகல – ஆனபல்லம மின்சார வேலி நிர்மாணப் பணிகள் தாமதமடைந்திருந்தமை

---------------------------------------------------------------------------------------------------------------------

30 கிலோ மீற்றர்கள் நீளம் கொண்ட ஹந்தபானகல – ஆனபல்லம மின்சார வேலியினை நிர்மாணிப்பதற்காக வேலிக்கம்பங்களும் உபகரணங்களும் 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் 30 கி.மீ. வேலியினை நிர்மாணிப்பதற்காக தேவையான நிதி ஏற்பாடுகள் 2013 செப்தெம்பர் 09 ஆந் திகதி சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், 22 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், நிர்மாணங்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிர்மாணிக்கப்பட்டிருந்த மின்சார வேலிகள் உரிய தரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

மின்சார வேலியில் காணப்பட வேண்டிய வோல்ட் இயலளவு 12 வோல்ட்ஸ் ஆக காணப்பட வேண்டிய போதிலும் 2014 யூலை 31 ஆந் திகதி பி.ப. 5.50 இற்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வேளியில் காணப்பட்ட வோல்ட் இயலளவு 3.7 அளவான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. கம்பிகள் ஒன்றுக்கொன்று சிக்குண்டும் வேலியின் வீதியினை சுத்தப்படுத்தல் பலவீனமான

நிலையில் காணப்பட்டமையும் இதற்கான காரணமாகும் என்பது களப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(iv) கிரிந்திஓய முதல் கும்புக்கன் வரையான மின்சார வேலி

---

2014 யூலை 30 ஆந் திகதி இந்த மின்சார வேலியை பரிசோதித்த போது கிரிந்திஓய முதல் ஏறத்தாழ 06 கி.மீ. வரையான பகுதி தவிர்ந்த எஞ்சிய பகுதி முழுமையாக உடைந்து விழுந்திருந்தது. வேலி காணப்பட்ட 06 கி.மீ. வரையான பகுதியும் காடு வளர்ந்து மின்சாரக் கம்பிகளின் மீது விழுந்திருந்ததுடன் சில இடங்களில் கம்பிகள் நிலத்தில் படுமளவிற்கு காணப்பட்டன. இன்னும் சில இடங்களில் Earth வயர் காணப்படாதிருந்ததுடன் கிரிந்தி ஓயவின் இருகில் மின்சாரக் கம்பிகள் மரங்களில் கட்டி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இந்த மின்சார வேலி உடைந்து விழுந்திருந்தமையால் அண்மித்த பிரதேசங்களிலுள்ள மக்களின் பயிர்கள் முழுமையாகவே யானைகளால் சேதமாக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் அப் பிரதேச மக்கள் அடிக்கடி வனச்சீவராசிகள் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்திருந்த போதிலும், அது தொடர்பில் வனச் சீவராசிகள் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்காமை அவதானிக்கப்பட்டது.

(v) அன்னாசிகல முதல் ஐஸ்பீல்ல வரை மின்சார வேலியினை நிர்மாணித்தல்

---

2014 யூலை 23 ஆந் திகதியளவில் இந்த மின்சார வேலியின் 17 கி.மீ. பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய 20 கி.மீ. களின் நிர்மாண நடவடிக்கைகள் காணிப் பிரச்சினை காரணமாக இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன. சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த மின்சார வேலி உபகரணங்களில் எந்தளவு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் எந்தளவு எஞ்சியிருந்தன என்பதும் வனச்சீவராசிகள் திணைக்களத்தினால் பரிசோதனைக்கு உட்படத்தப்பட்டிருக்கவில்லை. இந்த உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் வனச்சீவராசிகள் திணைக்களத்தினால் தேவையான அளவில் விநியோகிப்பதற்காக வேலைத்திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(vi) ஆயகபொல்ல முதல் ஹுலந்தாவ வரையான 40 கி.மீ. மின்சார வேலியினை நிர்மாணித்தல்

-----------------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, மின்சார வேலியை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தச் செலவினம் ரூபா 19,827,341 ஆக காணப்பட்டதுடன் அதில் மின்சார வேலியை நிர்மாணிப்பதற்காகவும் வேலியின் வீதியினை அமைப்பதற்காகவும் ரூபா 6,667,322 தொகை 2013 யூலை 07 ஆந் திகதி சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த மின்சார வேலியினை ஆயகபொல்லை முதல் ஹெல்கம வரை 10 கி.மீ. ஆகவும் ஹெல்கம முதல் வெலிஆர வரை 10 கி.மீ. ஆகவும் வெலிஆர முதல் தேவால மங்கட வரை 10 கி.மீ. ஆகவும் தேவால மங்கட முதல் ஹுலங்தாவ வரை 10 கி.மீ. ஆகவும் நிர்மாணிப்பதற்கு திட்மிடப்பட்டிருந்த போதிலும், முறையே 07, 01 மற்றும் 01 கி.மீ. என்ற விதத்தில் 09 கி.மீ. மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் தேவால மங்கட முதல் ஹுலங்தாவ வரை மின்சார வேலி நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

அயகபொல்ல முதல் மஹவெல்கல வரை 4 ½ கி.மீ. அளவு மக்களின் பங்களிப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதனைக் கருத்திற்கொள்ளாது ஆயகபொல்ல முதல் மின்சார வேலி நிர்மாணிக்கப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டிருந்தது. இதன்படி, இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள 4 ½ மின்சார வேலிக்காக இரண்டு தடவைகள் செலவு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(vii) தரமற்ற மின்சார வேலிக் கம்பங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தமை

-------------------------------------------------------------------------------------------------------------

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த மின்சார வேலிக் கம்பங்களின் தரம் தொடர்பில் ஊவா உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழுள்ள வல்லிஅம்மார வன அலுவலகத்தில் காணப்பட்ட வேலிக் கம்பங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வழங்கப்பட்டிருந்த சில கம்பங்களின் விட்டம் உரிய தரத்தில் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(viii) மின்சார வேலிகளை நிர்மாணிப்பதற்கு முன்னர் இரு சந்தர்ப்பங்களில் செலவுகளைச் செய்தல்

-----------------------------------------------------------------------------------------------------------------------

ஆயகபொல்ல முதல் தேவால மங்கட வரையான 17 கி.மீ. மின்சார வேலியினை நிர்மாணிப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மின்சார வேலி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும்,

2010 செப்தெம்பர் வரையிலும் இந்த மின்சார வேலி நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் 2010 யூலை மாதம் மீண்டுமொரு முறை ஆயகபொல்லை முதல் மஹவெல்கல வரை 07 கி.மீ. மின்சார வேலியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த வேலிக்காக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு, அந்த உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், மின்சார வேலி நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

2010 யூலை மாதம் ஆயகபொல்லை முதல் மஹவெல்கல வரை 07 கி.மீ. மின்சார வேலியை நிர்மாணிப்பதற்காக விலம்பவெவ மற்றும் தஹய்யாகல மின்சார வேலியை நிர்மாணிப்பதற்காக கொண்டுவரப்பட்ட மின்சார வேலி உபகரணங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.
இருப்பினும், ஆயகபொல்லை முதல் தேவால மங்கட வரையான 17 கி.மீ. மற்றும் ஆயகபொல்லை முதல் மஹவெல்கல வரையான 07 கி.மீ. மின்சார வேலிகள் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டில் மக்கள் பங்களிப்புடன் 4 ½ கி.மீ. அளவு மின்சார வேலி நிர்மாணிக்கப்பட்டு பெலவத்த சீனி கம்பனிக்கு உரித்தான மின்சார கூடத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ix) கண்காணிப்பின்றி தனியார் மின்சார வேலிகள் காணப்படுதல்

---

மின்சார வேலிகளை நிர்மாணித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் சில பிரதேசங்களிலுள்ள நபர்களால் தமது பயிர் நிலங்களைச் சுற்றி அனுமதியற்ற மின்சார வேலிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அவ்வாறான வேலிகளுக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் மூலம் எது என்பதும் காணப்படுகின்ற வோல்டேஜ் அளவு ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்தில் காணப்படுகின்றதா என்பது குறித்தும் பரிசோதனையோ அல்லது கண்காணிப்போ மேற்கொள்ளப்படாதுள்ளமை வெளிப்பட்டது. இவ்வாறான தனியார் மின்சார வேலிகள் காரணமாக யானைகள் அல்லது ஏனைய பாதுகாக்கப்பட்ட வனச்சீவராசிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கவில்லை என்பது தொடர்பில் கணக்காய்வில் திருப்திப்பட முடியாதிருந்ததுடன் அவற்றை கண்காணிப்பதற்கு உறுதியான வேலைத்திட்டமொன்றும் காணப்படவில்லை.

யானைகள் நடமாடும் இடங்களுடாக பிரதான வீதிகள் ஊடறுத்துச் செல்லுமிடங்களில் அப்பிரதான வீதிகள் ஊடாக யானைகள் கிராமத்திற்கு

வருவதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக காவல் அரண்களை நிர்மாணித்தலின் தேவை இணங்காணப்பட்டிருந்த போதிலும், இந்த நிர்மாணங்களின் தாமதம் காரணமாக இந்த நோக்கம் நிறைவேறியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(x) வனப்பூங்காக்களிற்கு கட்டாக்காலி மாடுகள் நுழைவதைக் கட்டுப்படுத்தல்

உடவலவை தேசிய பூங்காவிற்கு கட்டாக்காலி மாடுகள் நுழைவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பூங்காவின் தெற்கு எல்லையில் அமைந்துள்ள மின்சார வேலிக்கு சமாந்தரமாக 17 கி.மீ. இரட்டை மின்சார வேலி ரூபா 5.68 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் பூங்காவிற்கு வெளியார்களின் மாடுகள் நுழைதல் தடுக்கப்பட்டிருக்காமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை.

## 3.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

மலலஆர குடா இதிவெவ மின்சார வேலி வீதியை (26 கி.மீ) நிர்மாணிக்கையில் வனச்சீவராசிகள் அலுவலக உத்தியோகத்தர்களின் தேவையற்ற தலையீடு காரணமாக வேலையினை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு முடியாதுள்ளதாக ஒப்பந்தக்காரரினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 நட்டங்களும் இழப்புக்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மகாவலி ஜீ வலயத்திற்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 466,000 தொகையான 270 மரக் குற்றிகள் 2012 யூன் 20 ஆந் திகதி தீப்பற்றி அழிவடைந்திருந்தது.

(ஆ) மின்சார வேலியினை நிமாணிப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 28 மரக் குற்றிகள் தரமற்றவையாக காணப்பட்ட போதிலும் அதற்காக ரூபா 59,576 செலுத்தப்பட்டிருந்தது.

## 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

### 3.9.1 யானைகளுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

------------------------------------------------------------------------------------------

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வனச்சீவராசி வளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தகவல்களின் படி அத் திணைக்களம் 2014 செப்தெம்பர் இறுதி வரை 359 யானைகளுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருந்தது. இதில் விஹாரைகள், மிருகக் காட்சி சாலைகள் மற்றும் வீடுகளில் காணப்படுகின்ற யானைகளிற்காக தனிப்பட்ட பதிவேடொன்று திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. வீடுகளில் இருப்பதாக குறிப்பிட்டு பதிவுசெய்யப்பட்டிருந்த 14 யானைகளிற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட கோவைகளை கணக்காய்வில் பரிசோதிக்கப்பட்டதுடன் வெளிப்பட்ட முக்கியமான மோசடிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) வீடுகளிலுள்ள பெண் யானைகள் (பிடி) கருவுற்றுள்ளமை தொடர்பான 2009 இன் 22 ஆம் இலக்க வன உயிரினங்கள் மற்றும் விருட்சகங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 10 மற்றும் 22(9) ஆம் பிரிவின் படி வனச்சீவராசிகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) யானைக் குட்டிகளின் பிறப்பு பதிவுசெய்யப்பட்டிருக்காமை மற்றும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மரணித்த யானைகள் தொடர்பில் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) யானைக் குட்டிகளின் பிறப்பினை உறுதிப்படுத்தி கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் போலியாக தயாரிக்கப்பட்டிருந்தன.

(iv) போலியான சத்தியப் பிரமாணங்களையும் உரிமைகளையும் காண்பிக்கும் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(v) திணைக்கள உத்தியோகத்தர்கள் களப் பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கைகளை சமர்த்திருக்காமை மற்றும் சில அறிக்கைகள் மோசடியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(vi) முறைப்படியாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்திலும் டீ.என்.ஏ அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) முன்னர் பதிவுசெய்யப்பட்டிருந்த யானைகளின் கோவைகள் மோசடியாக திருத்தப்பட்டு யானைக் குட்டிகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(viii) யானைக் குட்டிகளின் பிறப்பின் போது சிகிச்சையளித்த மருத்துவரின் விபரங்கள் மற்றும் மற்றும் மருத்துவ அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேற்படி விடயங்களின் படி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட சகல கோவைகளிற்குமுரிய யானைகள் சட்ட விரோதமாக காட்டிலிருந்து பிடித்து

வைக்கப்பட்டிருந்த பின்னர் பதிவுசெய்து அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சட்டமா அதிபரின் அறிவுரைகளின் (ரிட் 625/09 ஆம் வழக்கு) படியும் கட்டளைச் சட்டத்தின் படியும் பதிவுசெய்யப்பட்டிருக்காத யானைகளை தம்வசம் வைத்துள்ள நபர்களிற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் காட்டுக்கு வெளியேயுள்ள யானைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக வழிகாட்டலொன்றும் தயாரிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், யானைகளைப் பதிவுசெய்தல் தொடர்பில் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்த உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை, விசேடமாக பதிவேடுகளின் பாதுகாப்பு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டிருந்த நடவடிக்கைகள் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டன. இதன் காரணமாக யானைகளின் பதிவை குறித்து வைத்திருப்பதற்காக பராமரிக்கப்பட்டிருந்த 06 பதிவேடுகளில் ஒரு பதிவேடு காணாமல் போயிருந்தது.

(இ) யானைகளை பதிவுசெய்தல் நடைமுறையில் காணப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) பதிவுக்காக விண்ணப்பப் படிவங்களை வழங்குகையில் குறித்த கட்டணத்தை செலுத்திய பின்னர் விண்ணப்பப் படிவங்களை விநியோகிப்பதற்கு நடைமுறையொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பதிவுசெய்கையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய யானையின் புகைப்படத்தில் யானையினை இனங்காண்பதற்காக புகைப்படத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் உறுதிப்பட குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. (உதாரணமாக: யானையின் காது, வால், தும்பிக்கை ஆகியவற்றை தெளிவாக இனங்காணக்கூடிய விதத்தில்)

(iii) விநியோகிக்கப்படுகின்ற பதிவுச் சான்றிதழிலும் வருடாந்த அனுமதிப்பத்திரத்திலும் ஒட்டப்பட்டுள்ள புகைப்படங்களைக் கழற்றி வேறு புகைப்படங்களை ஒட்ட முடியாதவாறு புகைப்படத்திற்கு சீல்வைக்கப்படுதல் அல்லது வேறு பாதுகாப்பான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iv) பதிவுசெய்வதற்காக விண்ணப்பத்தினை சமர்ப்பித்து பதிவுச் சான்றிதழை வழங்குவதற்காக குறிப்பிடத்தக்க காலம் எடுக்கையில் பதிவுச் சான்றிதழையும் வருடாந்த அனுமதிப்பத்திரத்தினையும் வழங்கும் திகதியில் யானையின் உண்மையான வயது, உயரம், முன் காலின் சுற்றளவு போன்றன சான்றிதழில் உள்ளடக்கப்படாது விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(v) யானைகளிற்காக பயன்படுத்தப்படுகின்ற பெயர்கள் பதிவுச் சான்றிதழிலும் வருடாந்த அனுமதிப்பத்திரங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(vi) வருடாந்த அனுமதிப்பத்திரத்தை வருடந்தோறும் அனுமதிப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்தி காலநீடிப்புச் செய்ய வேண்டிய போதிலும், வருடாந்த அனுமதிப்பத்திர காலத்தை நீடிப்புச் செய்கையில் அதற்காக விண்ணப்பித்திருந்த திகதியிலுள்ளவாறு யானையின் வயது, உயரம், முன் காலின் சுற்றளவு மற்றும் குறிப்பிடத்தக்க ஏனைய இலட்சிணங்கள் போன்ற தகவல்களுடன் விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இதற்காக படிவமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத்தைப் பெறுகையில் பற்றுச்சீட்டிலோ அல்லது கொடுப்பனவு உறுதிச்சிட்டையிலோ யானைகளின் பதிவு இலக்கம் அல்லது எந்த யானைக்காக காசு செலுத்தப்பட்டது என்பதனை இனங்காணக்கூடிய விதத்தில் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த அனுமதிப்பத்திரத்தை காலநீடிப்புச் செய்கையில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் உறுதிப்பட குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(vii) அனுமதிப்பத்திரத்தை காலநீடிப்புச் செய்கையில் காலநீடிப்புச் செய்யப்பட்டமைக்கான சான்றிதழொன்று வழங்கப்பட்டிருக்காமை மற்றும் அதற்காக உறுதியான நடைமுறையொன்று காணப்படவில்லை.

### 3.9.2 இயற்கை வனங்களைப் பாதுகாத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நுவரெலிய – அம்பேவல வீதியில் நுவரெலிய – அம்பேவல கால்நடை பண்ணையின் ஆரம்பத்திலிருந்து ஏறத்தாழ 2 கிலோ மீற்றர் அளவான ஹக்கல உயர் இயற்கை வனப்பிரதேசம், ஆம்பேவல கால்நடை பண்ணையினால் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டிருந்தமை தொடர்பில் திணைக்கள பணிப்பாளரினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹக்கல அதிஉயர் பாதுகாப்பு இயற்கை நிலப்பரப்பில் நுவரெலிய மாவட்டத்திற்குரிய பிரதேசத்தில் அத்துமீறி பிடித்துக்கொள்ளப்பட்ட 116 காணிகளும் பதுளை மாவட்டத்திற்குரிய பிரதேசத்தில் அத்துமீறி பிடித்துக்கொள்ளப்பட்ட 103 காணிகளும் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அடர்ந்த காட்டுப்பிரதேசமான இவ் வனாந்திரத்தினை பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் அதாவது அத்துமீறி பிடித்துக்கொள்ளப்பட்டவைகள் தொடர்பில் சட்டரீதியான படிமுறைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தொடர்பில் ஹக்கல உயர் வனாந்திரத்தில் அத்துமீறிய குடியிருப்பாளர்களை தடைசெய்தல், அத்துமீறிய குடியிருப்பாளர்களை நீதிமன்றத்தின் முன்நிறுத்தி அகற்றுதல், ஹக்கல அதி உயர் பாதுகாப்பு எல்லைகளை அடையாளப்படுத்தல், அத்துமீறிய குடியிருப்பாளர்களிற்கு மின்சார வசதிகளை வழங்காதிருத்தல், அதி உயர் பாதுகாப்பு பிரதேசத்தில் அனுமதியற்ற பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிற்காக தொடர்ந்தும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் அல்லது நீடித்தல் அல்லது புதுப்பித்தலை கைவிடுதல் போன்ற கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வனச்சீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 56 | 23 | 33 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 32 | 26 | 6 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1,401 | 891 | 510 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 426 | 325 | 101 |
| | மொத்தம் | 1,915 | 1,265 | 650 |